# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ**

************

**முறையீட்டு மனு எண்: 214/2017/பே.2**
**ஆணை எண்.95 /2018 நாள்.12.04.2018**

திரு. டி. நாராயணன்,
முன்னள் படைவீரர்,
சின்னசாமி நகர்,
வாலாஜாபாத்,
காஞ்சீபுரம் மாவட்டம். — முறையீட்டு மனுதார்

செயல் அலுவலர்கள்,
அச்சிறுப்பாக்கம், இடைக்கழிநாடு
திருப்போரூர், மாமல்லபுரம், திருப்போரூர்
பேரூராட்சிகள் — எதிர் மனுதார்கள்

## ஆணை

திரு T. நாராயணன், முன்னாள் ராணுவத்தினர், வாராஜாபாத், அவர்களின் 26.10.2017ம் நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுத்தில் 31.10.2017 அன்று பெறப்பட்டு முறையீட்டு மனு எண் 214/2017 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி முறையீட்டு மனு மீது உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது புகார் மனுவில் காஞ்சீபுரம் மாவட்டம், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலக உதவி செயற்பொறியாளரும், காஞ்சீபுரம் மாவட்ட பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் (பொறுப்பு) வகிக்கும் திரு எல். மனோகரன் என்பவர் மீது கஞ்சீபுரம் மாவட்டத்தில் உள்ள இடைக்கழிநாடு, அச்சிறுபாக்கம், மாமல்லபுரம், திருப்பெரும்புதூர், பீர்க்கன்கரணை, திருப்போரூர், உத்திரமேரூர், கருங்குழி, திருநீர்மலை, வாலாசாபாத், பெருங்களத்தூர் மற்றும் கூடுவாஞ்சேரி பேரூராட்களில் நடைபெறும் பணிகளில்

முறைகேடுகள் செய்து மேற்படி பேரூராட்சி செயல் அலுவலர்களிடமிருந்து பெருமளவில் தொகைகள் கையூட்டாக பெறுவதாக தெரிவித்து நடவடிக்கை எடுக்கக் கோரி தனது மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ 15.12.2017ம் நாளிட்ட அழைப்பாணையில் மேற்கண்ட புகார் மனு தொடர்பாக தங்களுடைய விளக்கங்களை பதிவு செய்ய அச்சிறுபாக்கம், மாமல்லபுரம், திருப்போரூர், இடைக்கழிநாடு, மற்றும் வாலாசாபாத் பேரூராட்சி செயல் அலுவலர்களை இம்முறைமன்ற நடுவத்தில் 08.03.2018 அன்றும், திருப்பெரும்புதுார், உத்திரமேரூர், பீர்க்கன்கரணை, திருநீர்மலை, பெருங்களத்தூர், கூடுவாஞ்சேரி மற்றும் கருங்குழி பேரூராட்சி செயல் அலுவர்களை 12.03.2018 அன்றும் நேரில் ஆஜராக ஆணையிடப்பட்டது.

இதன்படி 08.03.2018 அன்று ஆஜரான அச்சிறுபாக்கம், மாமல்லபுரம், திருப்போரூர், இடைக்கழிநாடு மற்றும் வாலாசாபாத் பேரூராட்சி செயல் அலுவலர்கள் தங்கள் வாக்குமூலங்களை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளனர்.

.அச்சிறுபாக்கம் பேரூராட்சி செயல் அலுவலர், தனது வாக்குமூலத்தில் "..... தான் மேற்படி பேரூராட்சியில் 01.07.2017முதல் பணிபுரிவதாகவும், மேற்படி பேரூராட்சியில் முள் மரங்களை அகற்ற மனுவில் குறிப்பிட்டுள்ளது போல் ரூ 11.00 லட்சம் செலவிடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டபோது தான் அங்கு பணிபுரியவில்லை எனவும் மேற்படி புகார் மனு தயார் செய்ததில் தனக்கு எந்தவிதமான தொடர்பும் உடன்பாடும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

மாமல்லபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலததில், "..... தான் 21.02.2018 முதல் மேற்படி பேரூராட்சியில் பணி புரிவதாகவும், 2014-15ம் ஆண்டில் குளங்கள் பணி நடைபெற்றதாகவும் மேற்படி பேரூராட்சியில் திரு வினோத்குமார் என்ற ஒப்பந்தக்காரர் எவரும் இல்லை எனவும் இந்த புகார் மனு தயார் செய்ததில் தனக்கு எந்தவிதமான தொடர்பும் உடன்பாடும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

திருப்போரூர் பேரூராட்சி செயல் அலுவலர்தனது வாக்குமூலத்தில், "....... தான் 01.06.2017 முதல் இப்பேரூராட்சியில் பணி புரிவதாகவும், இப்பேரூராட்சயில் 4 குளங்கள் மேம்பாடு செய்யப்பட்டதாகவும் அதில் எவ்வித முறைகேடும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். மேலும் தான் அச்சிறுபாக்கம் பேரூராட்சியில் பணி புரிந்தபோது முள் மரங்களை அகற்ற ரூ 1.00 லட்சம் மட்டுமே செலவிடப்பட்டது எனவும் மனுவில் குறிப்பிட்டுள்ளது போல் ரூ 11.00 லட்சம் செலவிடப்படவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்த மனு தயார் செய்ததில் தனக்கு எந்த விதமான உடன்பாடும் இல்லை " எனவும் தெரிவித்துள்ளார்.

.இடைக்கழிநாடு பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் "....தான் 26.08.2016 முதல் இப்பேரூராட்சியில் பணி புரிவதாகவும், 2013-14ம் ஆண்டு இடைக்கழிநாடு 5வது வார்டு பனையூர் பகுதியில் காளி பட்டினத்தார் வஞ்சி குளம் தூர் வாரப்பட்டதாகவும் இதற்கு ரூ 2.00 லட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டதாகவும் அது சமயம் மனுவில் குறிப்பிட்டுள்ள திரு எல். மனோகரன் என்பவர் உதவி செயற்பொறியாளராக பணிபுரியவில்லை எனவும் தெரிவித்துள்ளார். மேலும் மனுவில் குறிப்பிட்டுள்ள திரு வினோத்குமார் என்பவர் 2012-13 முதல் 2016-17 வரை இடைக்கழிநாடு பேரூராட்சியில் ஒப்பந்தக்காரராக இருந்தார்

எனவும் 2017-18ல் மேற்படி நபர் ஒப்பந்தக்காரராக இல்லை எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மேலும் இந்த மனு தயார் செய்ததில் தனக்கு எந்தவிதமான தொடர்பும் உடன்பாடும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

வாலாசாபாத் பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் "...... தான் 07.092016 முதல் மேற்படி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிவதாகவும், மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு வாலாசாபாத் பேரூராட்சியில் குளங்கள் பணிகள் ஏதும் நடைபெறவில்லை எனவும் தெரிவித்துள்ளார். மேலும் அவரது 09.03.2018ம் நாளிட்ட அறிக்கையில் , மனுவில் குறிப்பிட்டுள்ள 14வது வார்டுக்குட்பட்ட கோபால் நாயுடு தெரு சிமெண்ட் சாலை மற்றும் மழைநீர் கால்வாய் பணி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 94/நாள் 06.07.2007ன்படி ரூ7.50 லட்சம் மதிப்பீட்டில் 09.06.2009ல் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு 01.07.2009ல் பணி ஆணை வழங்கப்பட்டடதாகவம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த மனு தயார் செய்ததில் தனக்கு எந்தவிதமான உடன்பாடும் தொடர்பும் இல்லை எனவும் தனது 08.03.2018ம் நாளிட்ட வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

12.03.2018 அன்று ஆஜரான திருப்பெரும்புதுார், உத்திரமேரூர்,பீர்க்கன்கரணை, பெருங்களத்துார்,கூடுவாஞ்சேரி, திருநீர்மலை மற்றும் கருங்குழி பேரூராட்சி செயல் அலுவலர்கள் தங்கள் விளக்கங்கள் இம்முறைமன்ற நடுவத்தில் கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளனர்.

திருப்பெரும்புதுார் பேரூராட்சி செயல் அலுவலர் "........தான் 23.06.2017 முதல் திருப்பெரும்புதுார் பேரூராட்சி செயல் அலுவலராகவும், 27.10.2017 முதல் திருநீர்மலை பேரூராட்சி பொறுப்பு செயல் அலுவலராகவும் பணிபுரிவதாக , தெரிவித்துள்ளார். இப்பேரூராட்சிகளில் திரு வினோத்குமார் என்ற ஒப்பந்தக்காரர் எவரும் இல்லை எனவும், இப்பேரூராட்சிகளில் மனுதாரர் கூறியது போல் எந்த முறைகேடுகளும் இல்லை எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

.உத்திரமேரூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது விளக்கத்தில் "..... தான் 29.08.2016 முதல் இப்பேரூராட்சியில் பணிபுரிவதாகவும், திரு வினோத்குமார் என்ற ஒப்பந்தக்காரர் எவரும் இப்பேரூராட்சியில் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். ஒவ்வொரு மாதமும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணிகள் குறித்து தாங்கள் அனுப்பும் அறிக்கையின் மீது ஆய்வு மேற்கொள்ளப்படும் எனவும் இப்பேரூராட்சியில் மனுதாரர் கூறியது போல் எந்த முறைகேடும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

..பீர்க்கன்கரணை பேரூராட்சி செயல் அலுவலர் ".....தான் மேற்படி பேரூராட்சியில் 26.05.2016 முதல் பணி புரிவதாகவும் இப்பேரூராட்சியில் திரு வினோத்குமார் என்கிற ஒப்பந்தக்காரர் எவரும் பணி செய்யவில்லை என தெரிவித்துள்ளார். மாதாந்தோறும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஆய்வு நடத்தப்படும் எனவும் பணிகள் குறித்து தாங்கள் அனுப்பும் அறிக்கைகள் மீது ஆய்வு மேற்கொள்ளப்படும் எனவும் இப்பேரூராட்சியில் மனுதாரர் கூறியது போல் எந்தவிதமான முறைகேடுகளும் நடக்கவில்லை எனவும் தனது விளக்கத்தில் தெரிவித்துள்ளார்.

பெருங்களத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது விளக்கத்தில் "…. தான் 26.08.2016 முதல் இப்பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிவதாகவும், திரு வினோத்குமார் என்ற ஒப்பந்தக்காரர் எவரும் இப்பேரூராட்சியில் பணிகள் செய்யவில்லை என தெரிவித்துள்ளார். ஒவ்வொரு மாதமும் தாங்கள் அனுப்பும் பணிகள் குறித்தான முன்னேற்ற அறிக்கையின் அடிப்படையில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஆய்வு மேற்கொள்ளப்படும் எனவும் மனுதாரர் கூறியது போல் வேறு எந்த முறைகேடுகளும் நடைபேறவில்லை எனவும் தனது விளக்கத்தில் தெரிவித்துள்ளார்.

நந்திவரம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது விளக்கத்தில் "……தான் 29.01.2018 முதல் இப்பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிவதாகவும், திரு வினோத்குமார் என்ற ஒப்பந்தக்காரர் எவரும் இப்பேரூராட்சி பணிகளை செய்யவில்லை என தனது விளக்கத்தில் தெரிவித்துள்ளார். பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் தாங்கள் அனுப்பும் அறிக்கையின் அடிப்படையில் ஆய்வுக்கூட்டம் நடைபெறும் எனவும் மனுதாரர் கூறியது போல் வேறு எந்த முறைகேடுகளும் நடைபெறவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

கருங்குழி பேரூராட்சி செயல் அலுவலர் தனது விளக்கத்தில் "…… தான் 3/2016 முதல் இப்பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிவதாகவும் திரு வினோத்குமார் என்ற ஒப்பந்தக்காரர் எவரும் எந்த பணியினையும் செய்யவில்லை என தனது விளக்கத்தில் தெரிவித்துள்ளார். மாதந்தோறும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் தாங்கள் அனுப்பும் அறிக்கையின் மீதான ஆய்வுக் கூட்டம் நடைபெறும் எனவும் இதைத் தவிர மனுதாரர் கூறியது போல் வேறு எந்த முறைகேடுகளும் நடைபெறவில்லை எனவும் தனது விளக்கத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் மனுவில் குறிப்பிட்டுள்ள பேரூராட்சிகளின் செயல் அலுவலர்களின் விளக்கம் பெறப்பட்டதில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள திரு வினோத்குமார் என்ற ஒப்பந்தக்காரர் இடைக்கழிநாடு பேரூராட்சியில் மட்டுமே பணிகளை எடுத்து செய்துள்ளார் எனவும் ஏனைய பேரூராட்சியில் மேற்படி ஒப்பந்தக்காரர் பெயரில் எவரும் எந்த பணியினையும் செய்யவில்லை என தங்களது விளக்கத்தில் தெரிவித்துள்ளனர். மேலும் அச்சிறுபாக்கம், மாமல்லபுரம், திருப்போரூர், இடைக்கழிநாடு, மற்றும் வாலாசாபாத் பேரூராட்சி செயல் அலுவலர்கள் மேற்படி புகார் மனு குறித்து எவ்வித உடன்பாடும் இல்லை என தங்களது விளக்கத்தில் தெரிவித்துள்ளனர். முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள புகார்களுக்கான எந்த விதமான ஆதார ஆவணங்களையும் சமர்ப்பிக்கவில்லை. எனவே இந்நிலையில் மேற்படி புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள பேரூராட்சி செயல் அலுவலர்களின் விளக்கங்களின் அடிப்படையில் மேற்படி புகார் முகாந்திரமற்றதாக கருதி செயல் அலுவலர்களின் விளக்கங்களை ஏற்று புகார் மனுவினை தள்ளுபடி செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10 -ஆம் நாள் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

-//உத்திரவின்படி - அனுப்பப்படுகிறது//-

செயலாளர்.

பெறுநர்
1.திரு. டி. நாராயணன்,
முன்னள் படைவீரர்,
சின்னசாமி நகர்,
வாலாஜாபாத்,
காஞ்சீபுரம் மாவட்டம்.
2.செயல் அலுவலர்,
அச்சிறுப்பாக்கம், மாமல்லபுரம், கருங்குழி, இடைக்கழிநாடு, திருப்பெரும்புதூர், திருநீர்மலை, பெருங்களத்தூர், பீர்க்கன்கரணை, திருப்போரூர், உத்திரமேரூர், வாலாசாபாத் மற்றும் கூடுவாஞ்சேரி பேரூராட்சிகள்
3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்,
காஞ்சீபுரம்